பாக்கும் புகையிலையும் கொடுத்து சிறு யந்திரங்கள் பெறலாம்

Registered as a Newspaper in Ceylon ★ ✶ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 210
தேசிய தினசரி

[illegible] ஆவணி 23 [illegible] 14 ஞாயிற்றுக்கிழமை (8-9-68)

## பாக்கும் புகையிலையும் கொடுத்து சிறு யந்திரங்கள் பெறலாம்

### நல்லூர் எம். பி. யோசனை

கொழும்பு, சனி

பண்டமாற்று ஒப்பந்த அடிப்படையில் இலங்கையிலிருந்து பாக்கும், புகையிலையும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து அதற்குப்பதிலாக சிறிய ரக யந்திரங்களை இறக்குமதி செய்யலாம் என்று நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் யோசனை தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சின் செலவினங்கள் மீது இன்று மக்கள் பிரதிநிதிகள் சபை கமிட்டி நிலையில் பரிசிலனை செய்தபோதே நல்லூர் எம். பி. மேற்கண்ட யோசனையைத் தெரிவித்தார்.

8-ம் பக்கம் பார்க்க

தொண்டையில் அறுவை சிகிச்சைக்காக

# செவ்வாயன்று அண்ணா அமெரிக்கா பயணம்

## மனைவி ராணியும் உடன் செல்கிறார்

### "புற்று நோயா? இன்னமும் தெரியவில்லை"

சென்னை, செப். 7

தமிழ்நாடு முதல் அமைச்சரும் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவருமான திரு. சி. என். அண்ணாதுரை இம்மாதம் பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை அமெரிக்கா செல்கிறார். திரு. அண்ணாதுரையின் தொண்டையில் வளர்ந்துவரும் ஒரு சதையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவதற்காக திரு. அண்ணாதுரை அமெரிக்கா செல்கிறார். முதல் அமைச்சருடன் அவரது மனைவி திருமதி ராணி அண்ணாதுரை, வளர்ப்பு மகன் பரிமளம், டாக்டர் சி. என். சதாசிவம் ஆகியோர் கூடச்செல்கின்றனர்.

#### புற்றுநோயா?

திரு. அண்ணாதுரைக்கு ஏற்பட்டுள்ளது "புற்றுநோயா?" என்று சென்னை பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரியிடம் இன்று நிருபர்கள் கேட்டபோது, "இன்னமும் தெரியாது" என்று அவர் பதிலளித்தார்.

திரு. அண்ணாதுரை நேற்றிரவு நிம்மதியாக நித்திரை செய்தார் என்றும் காலையில் தாமாகவே விழித்தெழுந்தாரென்றும் அவரது உடல் உஷ்ண நிலை சாதாரணமாக இருப்பதாகவும் படுக்கையில் உட்கார்ந்திருக்கவும் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கவும் முடிகிறதென்றும் அவரது உடல் நிலைபற்றி கஞ்சுவதற்கொன்றுமில்லையென்றும் மூன்று டாக்டர்கள் இன்று விடுத்த வைத்திய அறிக்கையொன்று கூறுகிறது. முதலமைச்சர் சந்தோஷமாக இருக்கிறாரென்று அந்த அறிக்கை கூறுகிறது.

அண்ணாவுக்கு அறுவை சிகிச்சையை தமிழ்நாட்டிலேயே செய்யமுடியுமென்றாலும் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கவனம் செலுத்துவதற்குரிய வசதிகள் அமெரிக்காவிலிருப்பதால் அங்கே அறுவைச் சிகிச்சைக்கு அண்ணாவை அனுப்பி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

அண்ணாவின் அமெரிக்கப் பிரயாணத்துக்கான வசதிகளை மத்திய நிதி அமைச்சு செய்துகொடுத்துள்ளது.

## காங்கிரஸ் தலைவர்கள் அண்ணாவைப் பார்த்தனர்

தமிழ்நாடு முன்னாள் முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம், முன்னாள் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. கே. காமராஜ், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியம் திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியோர் இன்று திரு. அண்ணாதுரையை ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தனர். விரைவில் குணமடையவேண்டுமென அவர்கள் வாழ்த்தினர்.

#### ஜனாதிபதி வாழ்த்து

திரு. அண்ணாதுரை அமெரிக்காவுக்கு வைத்திய சிகிச்சைக்காகச் செல்வது பற்றியறிந்த இந்திய குடியரசுத் தலைவர் ஹுசைனின் அண்ணாவுக்கு இன்று அனுப்பியுள்ள ஒரு தந்தியில் விரைவில் குணமடைந்து ஆரோக்கியத்துடன் திரும்பவேண்டுமென வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் அண்ணாவுக்கு சில மலர்கள் அனுப்பி தமது வாழ்த்தையும் தெரிவித்திருக்கிறார்.

#### அண்ணாவின் பொறுப்பு

திரு. அண்ணாதுரை அமெரிக்காவிலிருந்து திரும்பும் வரை அவரது கடமைப் பொறுப்புக்கள், முன்னர் அவர் அமெரிக்கா சென்றிருந்தபோது செய்யப்பட்டதுபோல இம்முறையும் அவரது சகமந்திரிகளிடம் பிரித்துக்கொடுக்கப்படும்.

## நாகேஷ் மனைவிக்கு 2 வருட கடுழியம்

சென்னை, செப். 7

நகைச்சுவை நடிகர் நாகேஷ் மனைவியான ரெஜினாவுக்கு நேற்று சென்னை செஷன்ஸ் நீதிபதி திரு. என். இராமஸ்வாமி இரண்டு வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்தார். ரெஜினாவின் தந்தை சவரிமுத்துப்பிள்ளைக்கும் இரண்டு வருட கடுழிய தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் ஐந்து எதிரிகளுக்கு முறையே நான்கு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நாகேஷின் மைத்துனரும் ரெஜினாவின் சகோதரருமான செல்வராஜை கொலை செய்ததாக இவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நான்கு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

## துண்டிக்காணி பற்றி இருதரப்பட்ட கருத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழில் இலாகாவினர் விடுமுறைகால தொழில் பயிற்சி நிலையம் அமைப்பதற்கென எடுத்துக்கொண்ட துண்டிக்காணியை மாநகர சபையிடம் திருப்பி ஒப்படைக்கும்படி தங்களுக்கு எவ்வித உத்தரவோ அறிவித்தலோ, கிடைக்கவில்லையென்று யாழ்ப்பாணம் உதவித் தொழில் கமிஷனர் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

துண்டிக் காணியில் தொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்படுவதற்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அந்தக்காணியைத் திருப்பிக் கொடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்றும் யாழ்ப்பாணம் செயலகத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆனால் தொழில் இலாகாவினருக்காக எடுக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான துண்டிக்காணியை மாநகரசபையிடம் திருப்பி ஒப்படைக்கும்படி தொழில் அமைச்சர் சம்மதித்ததாகவும் அதற்கான உத்தரவை உதவித் தொழில் கமிஷனருக்கு அனுப்பியிருப்பதாக தொழில் அமைச்சர் தெரிவித்ததாகவும் யாழ்ப்பாணம் மாநகரசபை உயர் அதிகாரியொருவர் தெரிவிக்கிறார்.

துண்டிக்காணி யாழ். மாநகரசபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுவது நிச்சயமென்றும் அந்தக்காணியில் விரைவில் வீடமைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் மாநகரசபையைச் சேர்ந்த அந்த அதிகாரி தெரிவித்தார்.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இறைப்பொழுதும் எம் நெஞ்சில் இறைவனை மறவாமலிருப்பின், எது நேரிடினும் அதைப் பற்றி கவலைப்படமாட்டோம். சங்கடங்கள் வாழ்க்கையிலே புதிய சந்தர்ப்பங்களாகவும், தடைகள் உதவிகளாகவும் மாறிவிடும்.

—சுவாமி ராமதாஸ்


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389

கீலக வருடம் ஆவணி மாதம் 23-ந் திகதி
8-9 68)


## அ. செ. உ. சா.

சென்ற நான்கு மாதங்களுக்கு மேல் இங்கு அமுல் செய்யப்பட்டு வரும் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தால் இந்நாட்டின் பொதுமக்களுக்கு மட்டுமன்றி, அரசாங்கத்துக்கும் பல சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் இத்திட்டத்தைப் பற்றிப் புனராலோசனை செய்து, திருத்தி அமைக்கவோ அல்லது அடியோடு கைவிடவோ வேண்டியது அவசரமும், அவசியமுமாகும்.

இத்திட்டம் அமுலுக்கு வந்தது முதல் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக்கொண்டு போகின்றன. வெளிநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகும் சரக்குகளின் விலைகளுக்கும் நூற்றுக்கு 45 விகிதம் அதிகமாகச் செலுத்த வேண்டியிருப்பதால், அச்சரக்குகளின் விலைகள் திடீரென உயருவதைப் பார்க்கிறோம். அதைப் பின்பற்றி உள்நாட்டுச் சரக்குகளின் விலையும் ஏறி விடுகின்றன. உதாரணமாக ரஷ்யா, இந்தியா இந்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சீமெந்தியின் விலையில் அடுத்த மாதத்திலிருந்து இரண்டு ரூபாய் கூட்டுவதென்று கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. இதேசமயம் இலங்கையில் உற்பத்தியாகும் சீமெந்தி விலையையும் கூட்டப்போகிறார்களாம். வெளிநாட்டுச் சரக்குகள் மட்டுமன்றி உள்நாட்டுச் சரக்குகளும் விலை உயர்வதாயின் விடுகட்டும் பொதுமக்களுக்கு அதனால் எவ்வளவோ பாதகமேற்படும் என்பதை விளக்கத் தேவையில்லை. ஏற்கனவே இந்தச் சாமான்களின் விலை திமாக இருக்கையில் மேலும் அரசாங்கம் தனது இந்த நடவடிக்கையால் விலைகளை உயர்த்தியிருப்பது பொதுமக்களின் அதிருப்தியை சம்பாதிப்பதுடன் தேசிய அபிவிருத்தியையும் தடைப்படுத்துவதாகும்.

இது நிற்க, ஸ்ரீமாவோ-சாஸ்திரி திட்டத்தையும் இந்த ஏற்பாடு தடைப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. தாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தில் பாதியை அ. செ. உ. சா. திட்டப்படி இழக்க வேண்டி இருப்பதையும் இலங்கை ரூபாய்க்கு இந்திய ரூபாவைப் பெற வேண்டிய 100க்கு 45 விகிதம் கமிஷன் செலுத்த வேண்டுமென்றும் செய்துள்ளதால், இந்தியப் பிரஜைகளாக மனுச் செய்துகொண்டுள்ளவர் எண்ணிக்கை குறைந்து வருவதாயும், இந்தியா திரும்பிவிடலாம் என்று தீர்மானித்தவர்களும், தங்கள் முடிவை மாற்றிக்கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. மேற்குறித்த ஒப்பந்தப் பேச்சுகளின் போது இவ்வித புதிய தடை ஏற்படுமென்பதை யாரும் கனவிலும் கருதவில்லை. இந்த திட்டத்திலிருந்து இதசம்பந்தப்பட்ட மக்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்பதை நியாயபுத்தியுள்ள சகலரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அரசாங்கம் இதைப்பற்றி உடன் புனராலோசனை செய்து அவர்களுக்கு விலக்களிக்கவேண்டும் இன்றேல் அந்த ஒப்பந்தமே செத்துவிடக்கூடும்.

தனக்குப்புது வருமானம் கிடைக்கும் இனத்தை கைவிட்டுவிட அரசாங்கம் தயங்குவது இயற்கை. ஆனால் நாட்டின் பொது மக்களின் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து, அவர்களது அதிருப்தியைப் பெறுவது அரசாங்கத்துக்கு நிச்சயம் நல்லதல்ல. தனிப்பட்டவர்கள் கள்ளச்சந்தை வேலைகளில் ஈடுபடுவதைக் கண்டிக்கிறோம். ஆனால் அரசாங்கமே மறைமுகமாக இவ்வித வேலைகளில் ஈடுபடுவது அதன் தார்மீக மதிப்பைப் பெரிதும் குறைத்துவிட்டது. இந்நிலையில் அரசாங்கம் தனது நன்மையையும் பொதுமக்கள் நலனையும் கருதி இனியும் தாமதம் செய்யாமல் இதைப்பற்றி அடியோடு புனராலோசனை செய்ய முன்வரவேண்டும்.

# 55 ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியின்பின் விடுதலை அடையும் சுவாஸிலாந்து

**ஆபிரிக்க நாடான சுவாஸிலாந்து நேற்றுமுன்தினம் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்தது. சுமார் 55 ஆண்டுகள் இந்த நாட்டை பிரிட்டிஷார் ஆட்சிபுரிந்துள்ளனர். அந்த நாட்டின் மன்னர் 2-வது சொபூஸா விடுதலைக்கான பத்திரங்களை முறைப்படி நேற்று முன்தினம் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.**

பிரிட்டிஷாரின் நேரடி ஆதிக்கத்தின் கீழிருந்த சுவாஸிலாந்து புதிய அரசியல் திட்டமொன்றின் கீழ் 1967 ஏப்ரல் மாதம் 25-ம் திகதி சுயஆட்சியுரிமையுள்ள ஒரு நாடாக மாறியது. அந்நாட்டுக்கென்று ஆட்சியமைப்பு ஒன்று ஏற்பட்டது. ஆயினும் தலைவராக விளங்கிய இரண்டாவது சொபூஸா நாட்டின் மன்னராகப் பதவி ஏற்றார். பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் உள்ள நாடாக சுவாஸிலாந்தின் அந்தஸ்து மாறியது. ஆனால் வெளிநாட்டுக் கொள்கைகளும் பாதுகாப்பு விவகாரங்களும் பிரிட்டிஷாரின் கையிலேயே இருந்தன.

1969-ம் ஆண்டுக்குமுன் சுவாஸிலாந்துக்கு முழு சுதந்திரம் வழங்குவதென முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1967 ஜூலை மாதம் மன்னர் சொபூஸா விடுத்த ஓர் அறிக்கையில் 1968 செப்டம்பர் மாதவாக்கில் சுதந்திரம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதாகக் கூறியிருந்தார்.

சுவாஸிலாந்து தென்கிழக்கு ஆபிரிக்காவில் உள்ளது. இந்நாடு தென்னாபிரிக்கக் குடியரசினால் சூழப்பட்டுள்ளது. அதன் கிழக்கு முனை மட்டும் மொஸாம்பிக் நாட்டுடன் இணைகின்றது. அதன் விஸ்தீரணம் 6,704 சதுரமைல். 1966-ல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படி அதன் மக்கள் தொகை 389 000. இதில் 8.000 பேர் ஐரோப்பிய வம்சாவழியினர். அதன் தலைநகரம் மாவேன்.

சுவாஸிலாந்து உலோகப்பொருள் வளம் நிறைந்த நாடு. இரும்புக் கனிரசப் பொருட்களுக்கும், நிலக்கரிக்கும் பேர்போனது. உலகிலேயே மிகப்பெரிய கல்நார் சுரங்கங்களில் சில இங்கிருக்கின்றன. தகரம், வெள்ளி போன்ற உலோகப்பொருட்களும் இங்கு நிறைய கிடைக்கின்றன. அஸ்பெஸ்டோஸ், இரும்பு, நிலக்கரி ஆகியவை பெருமளவில் ஏற்றுமதியாகின்றன.

இங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். புற்களினால் கட்டப்படும் வீடுகளில் இவர்கள் வசம் செய்கின்றனர். இவர்களில் அநேகர் தென்னாபிரிக்காவில் தொழில் செய்கிறார்கள். சீனி, காகித உற்பத்திக்கான மர உற்பத்தி போன்ற தொழில்கள் இங்கு வளர்கின்றன. ஏராளமான இந்நாட்டில் தண்ணீர் வசதி அபரிமிதமாகவிருக்கின்றது. கரும்பு, சோளம், நெல், அன்னாசிப்பழம், தோடம்பழம் போன்றவை சிறப்பாக வளர்கின்றன. இவை அதேசமயம் ஏற்றுமதியாகும் பொருட்களாகவும் விளங்குகின்றன. கால்நடை வளர்ப்பும், மரஉற்பத்தியும் இங்கு மேற்கொள்ளப்படும் இன்னும் சில தொழில்களாம்.

# வெளிநாட்டுப் பரீட்சை இங்கிருந்தே எழுதும் வாய்ப்பு

## ஈழத்துக்கலைஞருக்கு அளிக்கவேண்டும் என்கிறார் உதவி அரசாங்க அதிபர்

உடுவில், சனி

"தமிழ்மக்கள் தமது இன, மத, மொழி வளர்ச்சிக்குத் தீவிரமாய் உழைக்கும் அதேவேளை தமிழர்கள் தம் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் பாதுகாக்க ஆவன செய்யவேண்டும். எமது கலை வளர்ச்சிக்கு உழைப்பவர்களை நாம் தக்கவாறு கௌரவிக்கவேண்டும்" என இணுவில் இசை நடனகிராமியக் கலைக்கல்லூரியினரின் ஆதரவில் இணுவில் அரசினர் மிஷன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற கலைவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கூறினார்.

விழாவில் இசைவிருந்தளித்த நாதஸ்வர வித்துவான் திரு. க. இ. சுந்தரமூர்த்திக்கு "நாதஸ்வர சிரோன்மணி" என்ற பட்டத்தையும், தவில் வித்துவான் திரு. க இ. புண்ணியமூர்த்திக்கு "லயஞான சிரோன்மணி" என்ற பட்டத்தையும் உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசம்பிள்ளை மேற்படி கல்லூரியின் ஆதரவில் வழங்கினார்.

"நம் நாட்டில் இருந்துகொண்டே இந்தியாவிலுள்ள பல்கலைக்கழக பட்டப்பரீட்சைகளை எழுதிப் பட்டம் பெற்றுக்கொள்வதைப் போல, இசைத்துறையில் சிறந்து விளங்கும் இந்தியா போன்ற இடங்களிலுள்ள இசைக்கல்லூரிப் பட்டங்களைப் பெற்றுக்கொள்ள இங்குள்ள கலைஞர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்" என உதவி அரசாங்க அதிபர் தமது உரையில் குறிப்பிட்டார்.

# 'இங்கேயே ஒரு சபையினை நமது அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும்'

— உடுவில் எம். பி.

இயல், இசை, நாடகம் ஆகியவற்றை வளர்ப்பதில் இன்று பல்வேறு நிலையங்களும் முன்னின்று உழைத்து வருகின்றன. ஆனால் இவ்வளர்ச்சி, அங்கீகரிக்கும் தன்மை இல்லாத காரணத்தால் பயனற்றுப்போய்விடுகின்றது. இந்தக் குறையை நீக்குவதற்கு அரசாங்கம் ஒரு விசேட சபையை அமைத்துக் கலைத்துறையில் முன்னேறுபவர்களுக்கு தகுந்த பரீட்சைகள் வைத்து அதாரப் பத்திரங்கள் வழங்கவேண்டும்." இணுவில் கலைவிழா இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"குறிக்கோளில்லாத கல்வி அச்சில்லாத வண்டிபோன்றது. நாம் பயிலும் கல்விக்கேற்ற ஆதாரத்தைப்பெறுவது அவசியம். இசைத்துறையில் பரதகண்டத்திலிருந்தே பட்டத்தையும் நாம் பெறவேண்டி இருக்கிறது. இந்நிலை மாறி ...... ரங்களை எமது நாட்டிலேயே பெற்றுக்கொள்ள அரசாங்கம் ஒரு சபையை அங்கீகரிக்கவேண்டியது அவசியம்."

### "நம் மத்தியிலும் எம்.ஜி.ஆர்.-சிவாஜி இருக்கிறார்கள்"

உடுவில் சனி

"எம். ஜி. ஆர். - சிவாஜி போன்ற இந்திய நடிகர்களின் திறமையும், நடிப்புத் திறனும்கொண்ட கலைஞர்கள் நம் மத்தியிலும் இருக்கிறார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்தாலும் அளிக்கவேண்டும். நாடகக் கலை வளர்ந்தால்தான் சினிமாக் கலை முன்னேறமுடியும்."

சுந்தரோடையில் நடைபெற்ற நாடக அரங்கேற்றத்தின்போது பேசிய 'நிர்மலா' படத் தயாரிப்பாளர் திரு ரகுநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பட்டினசபை 5ம் வட்டார அங்கத்தவர் திரு. எம். நடராசா தலைமை வகித்தார். சுந்தரோடை இறந்தவெளியரங்கில் இவ்விழா நடைபெற்றது. ராஜ் ...... 'சகுந்தலை' ...... நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது.

சென்றவருடம் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்கு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பரிசில்களும் தராதரப் பத்திரங்களும் வழங்கினார்.

### பதிவுத் திருமணங்கள்

கொழும்பு, சனி

சட்டப் படிபதிவுசெய்யப்படாது நடைபெற்ற திருமணத் தம்பதிகளின் திருமணங்கள் கண்டியில் 900மும், அனுராதபுரத்தில் 650ம், மாத்தறையில் 400ம், மட்டக்களப்பில் 200ம் பதிவு செய்யப்பட்டன. உள்ளூர் அபிவிருத்திச் சங்கம், பிரஜா மண்டலம், தொண்டர்படை ஆகியவற்றின் உதவியோடு நடைபெற்ற இத்திருமணப் பதிவுகள் இலவசமாகவே பதிவுசெய்யப்பட்டன.

# 'மீன்... செல...

## 1971-க்குள்... நாடு த...

### ஆட்சிமன்றத்தி...

கொழும்பு, சனி

"கடந்த வருடம் மீன் ஏற்றுமதியால் 7 லட்சம் ரூபாய் அந்நிய செலாவணி கிடைத்துள்ளது. 1971-ம் ஆண்டுக்குள் இலங்கை சீமெந்து உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிடும்" என்று கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று ஆட்சி மன்றத்தில் குறிப்பிட்டார்.

சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா தலைமையில் இன்று ஆட்சிமன்றம் கூடியது.

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன ...... கூறியதாவது:—

மீன்பிடிப் படகுகளை ...... களுக்கு வழங்குவதில் புதி...... இது மீனவர்களுக்கு ......

அரசியல் கட்சிகளு...

# 'ஆசிரி... உரிமை...

## டாக்டர் என்... மன்றத்தி...

ஆசிரியர்களுக்கு அர...... உரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை...... அரசியல் கட்சிகளு...... இடையே ஆதரவு ...... றதாம். லங்கா சமசமா...... கட்சி தலைவர் டாக்...... என். எம். பெரேரா ...... பிரேரணையை ஆட்சி மன்...... இல் கிளப்புவார்.

டாக்டர் என். எம். பெரேரா இவர்களது ...... கைகள் நியாயமானதெ...... ஏற்றுக் கொண்டுள்ள...... தமிழ் காங்கிரஸ், தமி...... சுக் கட்சியினர் இவர்...... கோரிக்கைகளை சம்பந்த...... பரிசிலனை செய்து வரு...... றது மற்றும் சில அர...... கட்சிகளைச் சேர்ந்தவர்...... இவர்கள் கோரிக்கை...... ஆதரிப்பதாக உறுதி...... த்துள்ளனர்.

**என். எம்.மை சந்தித்தனர்**

நேற்று முன்தினம் ...... சமசமாஜக் கட்சித் ...... வர் டாக்டர் என். ...... பெரேராவை ஆசிரியர் ...... ஆலோசனை சம்மேள...... தாகக் குழு சந்தித்...... பேசியது.

"ஆசிரியர் ...... த்தை அங்கீகரிக்கவும் ...... வேறுபாடற்ற சம்ப...... கை கொடுக்கவும் சமச...... ஜக் கட்சி அரசாங்கத்...... கேட்டுக் கொள்ளும்"

என்று டாக்டர் என். எம். அவர்களிடம் உறுதியளித்தார்

ஆசிரியர் ...... னைச் சம்மேளனம் ...... கோரிக்கைகளை அரசாங்...... த்துக்குச் சமர்ப்பித்துள்ள......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஏற்றுமதியால் ரூ. 7 லட்சம் ...லாவணி கிடைத்துள்ளது

## ...துள் சீமெந்து உற்பத்தியில் தன்னிறைவு பெறும்"

### ...றத்தில் கைத்தொழில் அமைச்சர்

பனிக்கூடிய [illegible] விதத்தில் அமையும்.

**நிவாரணம் வழங்கிவிட்டோம்**

1964-ம் ஆண்டு சூறாவழியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லையென்று யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் குறிப்பிட்டதில் உண்மையில்லை. சகலருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு விட்[illegible]. திரு. ஜி ஜி இப்படியாகக் குறிப்பிட்டது வருந்தத்தக்கதாகவுள்ளது.

"காலியிலுள்ள சீமெந்து தொழிற்சாலையின் மூலம் 40,000 தொன் சீமெந்து உற்பத்திசெய்ய முடியும்.

கைத்தொழில் மீன்பிடி உதவி அமைச்சர் திரு. வெஷ்டன் ஜெயசிங்க பேசுகையில், தேசக் கட்டுத்தாபனத்தினுல் எவ்வித பிரயோசனமுமில்லையென்று கூறுவதில் அர்த்தமில்லை. ரஷ்யாவுக்கு ரூபா 66,869 பெறுமதியான சப்பாத்துக்களை நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம். 20,000 ஜோடி சப்பாத்துகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன. நாணய மதிப்புக் குறைப்பினுல், தோல் கட்டுத்தாபனத்தினுல் சிறிதளவு நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான் என்று குறிப்பிட்டார்.

அனுராதபுரம், சனி

[illegible] கொலை வழக்கு சுப்ரீம்கோர்ட் விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. விக்லியம் ஜோன்டோ எனப்படும் விலிமாமா என்பவரைக் கொலை செய்ததாக அப்ரட் செய்ஸா, அலுபேர்ட் ஆகியவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## வாக்குச்சீட்டில் தில்லுமுல்லு

புதுடில்லி, செப். 7

கடந்தவருடம் பெப்ரவரி மாதம் நடைபெற்ற லோகசபைத் தேர்தல் சம்பந்தமான ஆட்சேப மனுவொன்றை விசாரணை செய்கையில் சுப்ரீம்கோர்ட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

"சிரூட் 2" தொகுதி தேர்தல் சம்பந்தமான இந்த வழக்கில் வாக்குச்சீட்டுக்களை மறுபரிசீலனை செய்கையில் சுப்ரீம்கோர்ட் பிரதம நீதிபதியே வாக்குச்சீட்டுக்களை எண்ணினர்.

சீல் வைக்கப்பட்ட ஒட்டுக் கட்டை பிரதம நீதிபதி திறந்துபார்த்தார். காங்கிரஸ் வாக்குகள் என தேர்தல் அதிகாரியால் கணக்கிடப்பட்ட 50 வாக்குகள் கொண்டகட்டில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்கும் வாக்கு ஒன்றுமட்டுமே இருந்தது. மற்ற 49 வாக்குகளும் ஜனசங் வேட்பாளருக்குரியவை. கட்டில் காங்கிரஸ் வாக்குச்சீட்டு மேலாகவும் மற்ற 49-ம் கீழேயும் வைக்கப்பட்டிருந்தன.

## கட்டபொம்மன் கோட்டை தோண்டி எடுக்கப்படுகிறது

### தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, செப், 6

பூமிக்கடியில் மறைந்து கிடந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் மாளிகையின் பல பகுதிகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வெள்ளையர் பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றியதும் கட்டப்பொம்மனின் கோட்டையை இடித்துத் தள்ளிவிட்டனர். இடிபாடுகளுக்கிடையில் மண்மூடிப் போன கோட்டையின் அடிப்பகுதியை தொல்பொருள் துறையினர் இப்பொழுது கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கட்டடத்தின் மறைந்துபோன பகுதிகளை வெளிக்குக் கொண்டுவந்து பாதுகாக்கும்படி தமிழக அரசு கட்டளையிட்டுள்ளது. இதுவரை வெளிக்காக்கப்பட்டுள்ள பகுதிகளில் கட்டபொம்மனின் ஆலோசனை மாளிகை மிக அழகாக இருக்கிறதாம். மன்னன் அமரும் பகுதியும் அமைச்சர் பிரதானிகள் அமரும் பகுதியும் அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றனவாம். ஆங்கிலேயர் பாவித்த பீரங்கிக் குண்டுகள், மருப்போத்தல்கள், விளக்குகள்போன்ற பொருட்கள் கிடைத்துள்ளனவாம்.

இங்கு கிடைத்துள்ள தொல்பொருட்களைக் காண தமிழகத்தின் பல பகுதிகளிலுமிருந்து மக்கள் போய்க்கொண்டிருக்கின்றனர்.

## "சமய அடிப்படையில் கல்வி அமையவேண்டும்"

### தமிழாசிரியர் சங்கத்தலைவர் கூறுகிறார்

உரும்பராய், சனி

ஒரு மாணவன் எதிர்காலத்தில் நல்ல பிரஜையாக இந்த நாட்டில் வாழவேண்டுமானுல் அந்த மாணவனின் கல்விசமயத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமையவேண்டும் சமய முக்கியத்துவத்தை அரசாங்கம் விசேடமாகக் கல்விப்பகுதி உணர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

சமீபத்தில் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் சார்பில் நடைபெற்ற பரீட்சைச் சபையில் உரையாற்றிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் க. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினர்-

பண்டிதர் சி. [illegible]. தம்[illegible] தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில் 'வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மாணவர் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு ஐந்தாம் வகுப்புப் பரீட்சையைத் திறம்பட நடாத்தி வருகிறது. சமயக் கல்வியின் [illegible] உணர்ந்து 1968 [illegible] பரீட்சைக்குத் தோற்றும் சகல சமயத்தைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்தவருடம் சமயபாடத்துக்கும் தோற்றக்கூடிய ஒழுங்குகளை வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மேற்கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது' என்று குறிப்பிட்டார்.

கணிதம், பாஷை, சூழல், ஆங்கிலம், சமயம் முதலிய ஐந்து பாடங்களையும் பரீட்சிப்பதற்கான குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

## "ஊழல் இல்லாமல் தேர்தல் நடக்க..."

உதகமண்டலம், செப் 7

இந்தியாவில் தேர்தல்கள் எந்த விதமான ஊழலுமில்லாமல் நேர்மையாக நடப்பதற்கு தேர்தல் அதிகாரிகள் மனப்பூர்வமாக வேலை செய்ய வேண்டும் என்று இந்தியாவின் தேர்தல் கமிஷனரான ஸ்ரீ எஸ் பி. செல்வர்மா வற்புறுத்தியுள்ளார். பிரதம தேர்தல் அதிகாரிகள் மகாநாடொன்றில் அவர் இப்படியாகச் சொன்னார்.

...சிகளுக்கிடையே ஆதரவு வலுக்கிறது

## ...ரியர்களுக்கு அரசியல் ...மை வழங்க வேண்டும்'

### ...என். எம். ஆட்சி ...த்தில் நேருவார்

இலங்கை அரசியல் கட்சிகள் ஆசிரியர் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரியுள்ளது. இதை அடுத்தே திரு. என். எம். பெரேரா எம். பி. ஆசிரியர் ஆலோசனைச் சம்மேளன நிர்வாக உறுப்பினர்களுடன் கோரிக்கைகள் பற்றி அலசி ஆராய்ந்தார்.

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமையைப் பெற்றுக் கொடுக்க தமது கட்சி பூரணமாக உதவும் என்றும், சமஉபகார வேதனம், சம உபகார வேதனக் கழிவு உபகார வேதன முற்பணம் ஆகியவற்றைக் கொடுக்க அரசாங்கத்தை வற்புறுத்துமெனவும் திரு. என். எம். பெரேரா எம். பி. தூதுக்குழுவுக்குத் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு வேலை நேரம் அதிகரிக்கப்பட்டு விடுதலை நாட்கள் குறைக்கப்பட்டு வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ள நிலைமைகளைப்பற்றித் தூதுக்குழு விளக்கிக் கூறியது.

**"ஊழல்களை ஒழிக்கவேண்டும்"**

தனியார் பாடசாலைகளில் இப்பொழுது நடைபெற்று வரும் ஊழல்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படி தூதுக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

அடுத்தவாரம் விவாதிக்கப்படும் கல்விமசோதாவில் தானும் எதிர்க்கட்சி உறுப்பினரும் ஆசிரியர்கள் அனைவரும் தேவைகளைப் பற்றிப் பேசுவதாக திரு என் எம், பெரேரா மேலும் கூறினர்.

**உபசபா நாயகர் அழைப்பு**

தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் எம். பி ஆசிரியர்கள் ஆலோசனைச் சம்மேளனத்தை தனது கட்சியினருடன் பல்வேறு கோரிக்கைகளையும் கலந்துரையாட வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். ஆசிரியர்களின் கருத்தை புலஸ். பி. ஐ. எல் ஏ. ஆக்கிரிக்கத்தக்கணம் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென திரு. சிவசிதம்பரம் எம். பி. அரசாங்கத்தை ஏற்கனவே கேட்டுக்கொண்டிருப்பது பற்றி ஆசிரியர் சம்மேளனம் மகிழ்ச்சி கொண்டுள்ளது.

தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம் பி யையும் ஆசிரியர்கள் ஆலோசனைச் சம்மேளனம் கோரிக்கைகளைக் கலந்துரையாடவும் ஆதரவு நல்கி அரசாங்கத்துக்கு அவற்றைச் சிபார்சு செய்யவும் கேட்டுள்ளது.

**ஆதரிப்பர்**

மற்றும்பல அரசியற்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆசிரியர்களின் சம்மேளனக் கோரிக்கைகளை ஆதரிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கம், தேசிய ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு சைவக் கோவிலில் சென்றவாரம் ஒரு விவாகம் நடந்தது. மணமகன் சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர். மணமகள் பறங்கியர் - கத்தோலிக்கர். இது காதல் திருமணமாம். இரு வீட்டாரும் ஏராளமாக வந்திருந்து, புதிய தம்பதிகளை ஆசீர்வதித்தனர். சில வருடங்களுக்கு முன் இப்படியான மணம் சைவக்கோவிலில் நடைபெற்றிருக்கமுடியுமா? சமூகத்திலேமக்களின் மனம் எவ்விதம்மாறிவருகிறதென்பதையும், சமயவேற்றுமைச் சுவர்கள் எவ்விதம் தகர்ந்து வருகின்றன வென்பதையும் காணக்கூடியதாகஇருந்தது.

பறங்கிப் பெண்ணான மணமகள், கூறைப்புடவை உடுத்தி, நெற்றியிலே குங்குமப்பொட்டு வைத்திருந்தார். கோவில் குருக்கள் இந்தக் கலப்பு மணத்தை மகிழ்ச்சியுடன் செய்து வைத்தது குறிப்பிடத்தக்கது. ○ ○ ○

ஒரு புதிய கட்டடத் திறப்புவிழாவுக்குச் சென்றிருந்தேன். பல மதத்தவர்களும் கூடியிருந்தனர். அதனுல்தான்போலும் தெய்வப் பிரார்த்தனை எதுவும் நடக்கவில்லை.

தலைவர் முதலிலேயே பிரதமவிருந்தினரை வரவேற்றுப் பேசினர். பிரதமவிருந்தினரும் பேசத் தொடங்கிவிட்டார். பின்னர் தான் நினைப்பு வந்தது வரவேற்புப்பாவைப் பற்றி. உடனேபிரதமவிருந்தினரை உட்காரச் சொல்லி, வரவேற்புப் பாவைப் பாடச் செய்தனர். அந்தப் பாட்டுப் பாடி முடியும்வரையில் எல்லாரும், சுமார் பத்துநிமிடங்களுக்கு நிற்கவேண்டியதாயிற்று. பிரார்த்தனை செய்யும் போதுதான் எழுந்துநிற்கவேண்டும். வரவேற்புப் பா பாடுகையில் ஏன் நிற்கவேண்டுமென்பது புரியவில்லை.

முதலில் தெய்வப்பிரார்த்தனையுடன் விழாவை ஆரம்பித்திருந்தால் இந்தத் தடுமாற்றமெல்லாம் இல்லாமற்போயிருக்கும் பலமதத்தவர்களும் கூடியிருக்கும் கூட்டத்தில் எந்தத் தனிமதப் பிரார்த்தனையையும் செய்வது உசிதமல்லவென்று கருதி, பிரார்த்தனையையே அடியோடு விட்டுவிட்டார்கள் போலும். ஆனல் இவ்வித சமயங்களில் மௌனமாக ஒரு நிமிஷம் எல்லாரும் எழுந்து நின்று பிரார்த்தனை செய்தாயின் இவ்வித தடுமாற்றங்களை தவிர்த்திருக்கக் கூடும். பிரார்த்தனை எதற்காக? நம் மனம் தெளிவாக இருந்து எடுத்த காரியம் தடையின்றி நிறைவேற நம் எல்லாருக்கும் முன்னே பொதுவாக இருக்கும் தெய்வீகத்தின் உதவியை நாடத்தான். அந்த பொதுச்சக்திதானே நம் மனதை எல்லாம் பரிசுத்தமாக்கி ஒற்றுமைப்படுத்தி ஒத்துழைக்கவைக்கிறது!

மௌனப் பிரார்த்தனை செய்தால் இதை யாரும் ஆட்சேபிக்க முடியாதல்லவா! ○ ○ ○

மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமுமாய் மாணிக்கந்தானே ஆகிக் கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக் கலைஞானந்தானேயாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப் பிரளயத்துக் கப்பாலோர் அண்டமாகி எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்றவாறே.

— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விறுவிறுப்பான உதைபந்தாட்டம்

# திருமலை வெற்றி

## சந்தர்ப்பங்களை நழுவ விட்டது யாழ். கோஷ்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்படும் அகில இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது வட்டத்தில், யாழ்ப்பாணம் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும், திருக்கோணமலை தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும் கலந்து கொண்ட போட்டியில் திருக்கோணமலைக் கோஷ்டி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி 5 நிமிடங்களுக்குள் யாழ் கோஷ்டி மிக இலகுவாக கோலைப்போடக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை நழுவவிட்டது. இதன் பின் 20 நிமிடங்கள் வரை இருகோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இடைவேளைக்கு 7 நிமிடங்கள் இருக்கும் போது, திருமலைக்கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் கமலநாதன் மிகவும் சாதுரியமாக அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இடைவேளையின் போது திருமலைக் கோஷ்டி இரண்டு கோல்களை (2—0) பெற்றிருந்தது. யாழ் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் இராஜசிங்கம், பெர்னாண்டோ ஆகிய வீரர்களின் விளையாட்டு பாராட்டத்தக்கதாக இருந்தது. யாழ். கோஷ்டியின் முன்னணி வீரர்கள் கோல்களை போடும் பல சந்தர்ப்பங்களை இழந்துவிட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது, யாழ். கோஷ்டியின் பின்னணி வீரர் வில்சன்லோ திருமலைக் கோஷ்டியின் கோல்காவலனை நோக்கி அடித்த பந்தை, கோஷ்டியின் இடது உள் முன்னணி வீரர் கணேசலிங்கம் கோலாக்கினார். திருமலைக் கோஷ்டியின் காப்டன் தர்மமணன், வடிவேல் ஆகியோரின் விளையாட்டு பாராட்டக் கூடியதாகவிருந்தது.

ஆட்டம் முடிவடையும் போது திருமலைக் கோஷ்டி யாழ். கோஷ்டியை 2—1 கோல்களால் தோற்கடித்தது. யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு அக்கல்லூரியின் அதிபர் வண. பிதா. மருதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இப் போட்டிக்கு திரு. பெர்ணாண்டோ மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

### வடமாட்சியில் தொந்துப்பயிற்சி

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள சகல பாடசாலை உதைபந்தாட்டக் கோஷ்டியினருக்கு, இந்தியாவிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்ட திரு. அல்பிரெட் பெர்னாந்தோ என்பவரால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பயிற்சியளிக்கப்பட்டது. பருத்தித்துறை உடற்பயிற்சி அதிகாரி திரு. எஸ். கதிர்காமத்தம்பியும், உடுப்பிட்டி உடற்பயிற்சி அதிகாரி திரு. கே. கார்த்திகேசுவும் இதில் கலந்துகொண்டனர்.

### மணவாள விழா

உரும்பராய், ஞாயிறு

வரணி சித்தி விநாயகப் பெருமான் மணவாளக் கோல விழா நாளை நடைபெறவிருக்கிறது.

அவ்வாலயத்தில் பரிவார தெய்வமாக, வைரவசுவாமி பிரதிஷ்டையும் நடைபெறும். வட்டுக்கோட்டை வாகன வித்துவான் திரு. க. அப்புத்துரையால் உருவாக்கப்பட்ட புதிய பெருச்சாளி வாகனத்தில் விநாயகப்பெருமான் வீதிவலம் வரவும், மகேஸ்வர பூசை நடைபெறவும் உபயகாரர்கள் ஒழுங்குகள் செய்துள்ளனர்.

### 40 வருட ஆசிரிய சேவைக்கு பின் ஓய்வு

உரும்பராய், சனி

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக் கனிஷ்ட பிரிவுத் தலைமையாசிரியர் பண்டிதர் நீ. சி. முருகேசு நேற்றிலிருந்து தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பண்டிதர் முருகேசு உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் 35 ஆண்டுகளும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஓராண்டும் அத்தியார் இந்துக்கல்லூரியில் நான்காண்டுகளும் கடமையாற்றியுள்ளார்.

### அமெரிக்க......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

12, 000 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு ஏற்படாமல் தடுக்கவே குறிப்பிட்ட மாநாடு நடைபெற்றது. இருதிறத்தாரையும் சமாதானப்படுத்தவே மேற்படி ஒன்றுக்கொன்று முரணான அறிக்கையை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

1956-ம் ஆண்டு ஹங்கேரி மீது சோவியத் படைகள் ஆக்கிரமிப்பு மேற்கொண்ட போதும் இக்கட்சிக்குள் மாறுபட்ட அபிப்பிராயங்கள் எழுந்தன என்று தெரிகிறது. மாஸ்கோவின் கொள்கை அடிக்கடி மாற்றமடையும் போது அமெரிக்க கம்யூனிஸ்டுகளும் அதற்கேற்ப தங்களுடைய நிலைகளை மாற்றிக் கொண்டு வருவது கண்கூடு.

### சிந்தாத்திரை மாதா திருநாள்

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியிலுள்ள யாத்திரை தலங்களில் ஒன்றான வேலணைசாட்டி அர்ச். சிந்தாத்திரை மாதாகோவிலின் திருநாள் இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகிறது. தினமும் மாலையில் திவ்விய பூசையும், மாலையில் நவநாள் ஆராதனைகளும், 23 திகதி மாலை, செபமாலை திருப்பணித்திவால ஆராதனை, திவ்விய சற்பிரசாத சுற்றுப்பிரகாரம், திருச்சுரூப எழுந்தேற்றம் என்பனவும் நடைபெறும்.

24-ம் திகதி காலை 5-30 மணிக்கு பூசையும், 6-30 மணிக்கு பெரியபாடற் பூசையும், அதைத்தொடர்ந்து திருச் சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். இன்று நடைபெறும் ஆராதனைகளை, மண்டதீவு மிசாம் சபைக்குரு வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் நிறைவேற்றுவார்.

### இடமாற்றங்கள்

அளவெட்டி, சனி

மீசாலை அரசினர் தமிழ் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆ. த. சுப்பிரமணியம் அடுத்தமாதம் முதல் வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்குத் தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. த. வேலுரு அளவெட்டி அருணாசல வித்தியாசாலைக்கு அடுத்தமாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புங்குடுதீவு கண்ணகைம்மன் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் கோவில் நான்காவது வருடாந்த கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இம்மாதம் 10-ம் திகதி காலை 10 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் பகல் 12 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். அன்று மாலை கோவில் மண்டபத்தில் மகாசபைக் கூட்டமும் நடைபெறும்.

### நஷ்டம்

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு ஐக்கிய மாதர் வண்ணைச் சங்கம் கடந்த ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையில் ரூபா 1469-33 சதம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கொள்முதல் செய்வதலுக்கு குற்றம் அறவிடப்பட்டதாலேயே இந்த நஷ்டம் ஏற்பட்டதாக அறியப்படுகின்றது.

### இலக்கியவிழா

உடுவில், சனி

மானிப்பாய் பட்டினசபை நிலையத்தினரின் வருடந்தோறும் நடைபெறும் வருடாந்த இலக்கியவிழா இம்முறையும் சிறப்பாக நடைபெற்றது.

மானிப்பாய் பட்டினசபையின் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. வி. நாகலிங்கம் தலைமை வகித்தார். வித்துவான் திரு கே. கணபதிப்பிள்ளை "சிலப்பதிகாரம்" என்ற பொருள் பற்றி உரையாற்றினார். ராஜ் குழுவினரின் 'சக்கடத்தார்' என்னும் நகைச்சுவை நாடகமும் நடைபெற்றது.

### தமிழ் விழா நடத்துவர்

சுழிபுரம், சனி

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலையினர் அடுத்த மாதம் தமிழ்விழா ...

# செய்திச் சுருக்கம்

### பாகிஸ்தானுக்கு இலங்கை டயர்

வம்பலப்பிட்டி, சனி

இந்த வருடத்தில் பாகிஸ்தான் இலங்கையிடமிருந்து 5,000 டயர்களை வாங்கவிருக்கிறது. ரஷ்ய உதவியுடன் இங்கு தயாரிக்கப்படும் டயர்களுக்கு இது ஒரு நல்ல எதிர்காலத்தைத் தேடித்தரும் அறிகுறியெனக் கருதப்படுகிறது.

0 0 0

### 150 புதிய பஸ்கள்

இ. போ. ச. 570 புதிய பஸ்களை இறக்குமதிசெய்யவிருக்கிறது. இன்னும் 17 மாதங்களில் இவை இங்கு இறக்குமதியாகும். இறக்குமதியாகும் 570 பஸ்களில் 50 டபிள் டெக்கர்களும் அடங்கும். இந்தியா வழங்கியுள்ள ரூபா 5 கோடியும் இதற்குப் பயன்படுத்தப்பட்டு இந்தியாவிலிருந்தும் லெய்லண்ட் பஸ்கள் இறக்குமதி செய்யப்படும். அதிகமான பஸ்கள் லண்டன் போக்குவரத்துச்சபையிடமிருந்து வாங்கப்படவிருக்கிறது.

0 0 0

### பட்டதாரிகளுக்கு வேலை

1969-ம் வருடத்துக்கு முன்னர் சுமார் மூவாயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுவருகிறது. நிதி அமைச்சு அதிகாரிகளின் ஆலோசனையுடன் இத்திட்டம் தயாராகிறது. கிராமப்புறங்களில் விஞ்ஞானக் கல்வி பயிற்றுவிப்பதற்கு இருநூறு விஞ்ஞானப்பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இத்திட்டத்தினால் பல தமிழ் வாலிபர்களும் பலனடையவிருக்கின்றனர்.

தற்போது இலங்கையில் சுமார் எண்ணாயிரம் பட்டதாரிகள் வேலையற்றிருக்கின்றார்கள்.

0 0 0

### 555 டாக்சிகள்

555 டாக்சிகள் இங்கு விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. இதற்கான அனுமதியை அமைச்சு அளித்துள்ளது.

ஃ ஃ ஃ

### ஓய்வுவிதி தளர்த்தப்பட மாட்டாது

அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு என்றவிதியை தளர்த்துவதில்லை என்றும் இந்த விதியை கண்டிப்பாக குறைந்தவர்கள் விஷயத்தில் ஜே. எஸ். சி. க்கும் தற்போது கீழுள்ளவர்களுக்கு அமுல் நடத்துவதெனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விதியின் கீழ் சுமார் 3000 அரசாங்க ஊழியர்கள் வேலையிலிருந்து ஓய்வுபெறுவர்.

ஃ ஃ ஃ

### குற்றங்கள் அதிகரிக்கக்காரணம்

கண்டி, வெள்ளி

"கதுவை மனிதர்கள் அதிகமாக உட்கொண்டுவருவதும் தவறான கல்வி முறையுமே இலங்கையில் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்குக் காரணம்" என இலங்கைப் பல்கலைக்கழக தத்துவ பேராசிரியர் டாக்டர் கே. என். ஜயதிலக ட்ருகாஸ் தோட்டையிலுள்ள கலாசாலையில் ஸ்ரீ தலதாம்பாசலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

### வேலையில்லா திண்டாட்டத்துக்கு காரணம்

இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதற்கு நாட்டின் கல்வி முறையே காரணம் என உலகவங்கி தெரிவித்துள்ளது. உலகவங்கி நடத்திய பூர்வாங்க ஆராய்வின் பின்னரே இதனை அறிவித்துள்ளது. நாட்டின் தேவைக்கேற்ப கல்விமுறை அமையவில்லையென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 லட்சம்பேர் இப்போது வேலையற்றிருக்கின்றார்களென உலக வங்கி அறிக்கை தெரிவிக்கிறது.

0 0 0

### தொழிலாளர் உரிமை

வம்பலப்பிட்டி, வெள்ளி

"யு. என். பி. அரசாங்கம் கடைப்பிடித்துவரும் சர்வாதிகாரக் கொள்கையால் தொழிலாளர் தமது தொழிற்சங்க உரிமைகளை இழந்துள்ளனர். தொழிற்சங்கங்களில் பதிவுசெய்யப் பல தொழிலாளர்கள் அஞ்சுவது ஆச்சரியமானதொரு காரியமல்ல"

இவ்வாறு அநுராதபுரம் எம். பி. திரு. கே. பி. ரத்நாயக்கா அகில இலங்கை ரயில்வே எஞ்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தின் வடபகுதிக் கிளையின் 2-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொழிலாளர்களின் நிலைமையைச் சீர்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்!

0 0 0

### இலங்கைக்குப் பரிசு

வம்பலப்பிட்டி, சனி

இலங்கை அரசாங்க ஆதரவில் தகவற்பகுதி தயாரித்து வெளியிட்ட 'கண்டிப் பெரஹரா' என்ற தகவல் படத்துக்கு இரண்டாவது சர்வதேச உல்லாசப் பிரயாணத் திரைப்படவிழாவில் வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது.

### விவசாயிகளுக்கு விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் ஆதரவில் இம்மாதம் 9-ம் திகதி பிற்பகல் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் விவசாயிகளுக்கான ஒரு விளக்கக் கூட்டம் நடைபெற விருப்பதாகவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர், வித்தியாதிபதி, சமூகசேவை ஆணையாளர், சுகாதார அதிபர், விவசாய அதிபர், மிருகவைத்தியர் ஆகியோர் உரைநிகழ்த்துவரெனவும் ஆனைக்கோட்டைப் பயிர்ச்செய்கைக் குழு அறிவித்துள்ளது.

### இலவசக் கடன் பெறலாம்

சுன்னாகம், சனி

வலதேசக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களில் சிலர் 1967—1968-ம் ஆண்டுகளில் பெற்ற விவசாயக் கடனை மேற்படி சங்கத்திற்குத் திருப்பிக் கட்டாதபட்சத்திலும், கடனைத் திருப்பிக் கட்டியவர்கள் வங்கியில் கடன்பெற விண்ணப்பிக்கலாம் என உணவு விவசாய இலாகா நிரந்தரக்காரியதரிசி வடமாகாண அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.


"சூரியன் மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரர் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குழந்தையும் சூழலும்

### கருத்தரங்கில் உரை

சங்கானை, சனி

"குழந்தையின் கல்வி ஆசிரியர் ஏடு தொடக்கும்போது தொடங்குவதில்லை. குழந்தை கருவிலே உற்பத்தியாகும்போதே அதன் மதிநுட்பம் ஓரளவிற்கு உருவாகின்றது. சூழல் பெற்றோரின் சிந்தனை முதலியவற்றிலே கல்வி கருத்து பெருமளவில் தங்கியுள்ளது. பெற்றோர்கள் தகுந்த சூழலை ஏற்படுத்துவதன் மூலம் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு பெருமளவில் உதவலாம். சேரிப்புறக் குழந்தைகளுக்கும் மத்தியவகுப்பு குழந்தைகளுக்குமிடையேயான ஏற்றத்தாழ்வு பற்றி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலே ஆராய்ச்சி செய்து கல்விச்சூழலைப்பற்றி அதிக கவனம் எடுக்கின்றார்கள்"

இவ்வாறு திரு. மு. சிவானந்தன் சங்கானை பட்டின சபையின் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கைதடி

## தமிழரசு இளைஞர் நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் "கைதடிக்கிளை" வருடாந்தக் கூட்டம், கைதடி வடக்கு இராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. சுப்பையா, உப-தலைவர்: திரு. இ. செல்லையா, செயலாளர் திரு. மாறன், உபசெயலாளர்: திரு. இராசேந்திரன், பொருளாளர்: வை. சின்னத்துரை, உபபொருளாளர்: திரு. க. கணேசலிங்கம். ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (ந. நி.)

## புதிய உறுப்பினர்

அளவெட்டி, சனி

கட்டுவன் மயிலிட்டி-தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்த கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. அருணாசலம் உபதலைவர்: ஆ. சுந்தரைய காரியதரிசி ஆ. நாகலிங்கம்,

ஆ. வல்லிபுரம், இ. வல்லிபுரம், வ. வேலுப்பிள்ளை, த. சின்னத்துரை, பூ. காசிநாதர், க. இக்கியம்பலம் ஆகியோர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## கடனுதவி

கிண்ணியா, சனி

கிண்ணியா பட்டின சபை மின்சார திட்டத்திற்காக உள்ளூராட்சி அமைச்சு 4 லட்சத்து 56 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கியுள்ளது.

## தென்கோவைப் பண்டிதரின் உருவப்படம்

உடுவில், சனி

கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற தென்கோவைப் பண்டிதர் திரு ச. கந்தையாபிள்ளையின் முழு உருவப்படம் இந்தியாவிலுள்ள கடலூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டது.

திருவாளர்கள் ஞா இராசதுரை தி சிவகுருநாதன் ஆகியோர் இப் படத்தை எடுத்து வந்திருந்தனர்.

தென்கோவைப்பண்டிதர் திரு. ச. கந்தையாபிள்ளை வித்தகம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியவர். திருவாசக உண்மை என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார்

## மக்கள் புகார்

சாவகச்சேரி சனி

கைதடி நாவற்குழி மறவன்புலம் ஆகிய இடங்களில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் சென்ற ஞாயிறு திங்கட்கிழமைகளில் பூட்டப்பட்டிருந்ததைத் தொடர்ந்து அதிருப்தி அடைந்த பொது மக்கள் இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார் செய்துள்ளனர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி இவ்விதம் கடை பூட்டப்பட்டிருந்ததை அறியாத பல பொதுமக்கள் கடைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாது அதிருப்தியுடன் வீடு திரும்பினர். வழமையாக இத்தினங்களில் பிரஸ்தாப கடை திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பலன்

(8-9-68)

ஆவணி ௴ 23 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- துதியை இரவு 4-31 மேல் திருதியை.

நட்சத்திரம்- உத்தரட்டாதி இரவு 4-40 மேல் ரேவதி.

ராகுகாலம்- 4-34 — 6-04.

சுபநேரம் - 9-04 — 10-34.

இன்று பிறந்தவர்களுக்கு இலட்சியத்துறையில் என்னதான் வெற்றி கிடைக்கினும், கருவாயில் மந்தநிலை காணப்படும், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். குடும்பத்தில் மனைவியால் அமைதி கிடைக்கும். சகோதரவழியால் சச்சரவுகள் தோன்றி மறையும். இவ்வாண்டு ஒரு நீண்ட பயணத்துக்குத் திட்டமிடுவீர்கள் தொழிலாளர்கள் வாழ்க்கையில் அமைதி குன்றும். பெரியவர் ஒருவரின் உதவி தக்கசமயத்தில் கிடைக்கும்.

மேஷம்- தனச் சிறப்பு, தானியவிருத்தி.

ரிஷபம்- குடும்ப சுகக் குறைவு, பிரிவுத் துயர்.

மிதுனம்- அன்பினிலே அமைதிக்குவழி

கடகம்- தனிகவர்ப் பார்வை, பரிவின் உதவும்.

சிம்மம்- வஞ்சகர் உறவு சஞ்சல மனம்.

கன்னி- விழிவா வே மொழி பேசி விளையாட நன்று.

துலாம்- அரச கவலை, அமைதி விடைபெறும்

விருச்சிகம்- சாத்த குணம், சன்மானமுண்டு

தனுசு- நிதானப் போக்கு நிலைமையில் உயர்வு.


மகரம்- ஒளிக்கதிர் பரவும், உல்லாச வாழ்வு.

கும்பம்- போனது போகட்டும், பொறுமை வேண்டும்.

மீனம்- அடி சறுக்கும் ஆணவத்தை அடக்கு.

சோதிடக்கலாநிதி

திருமதி வேலுப்பிள்ளை



வினா: இதமாக மெருகிட்ட இந்தச் சுவருக்கு
உ-லோன் எஸ்-லோன் விளம்பரத்தில் என்ன வேலை?

விடை: இருக்கிறது நிறைய! அந்த அலங்கார மின் விளக்கை ஒரு தரம் பார்த்தால் அம்பலமாகி விடும் மர்மம்! சுவரில், அறையின் கவர்ச்சியை அலங்கோலமாக்கும் மின்கம்பிப் பட்டிகளின் துருத்தல் இல்லை!

சுவர்களின் பின்னாலே — ஆமாம்; உண்மையாகப் பின்னாலேதான் — பின்பலமாக இருப்பது, மின்இணைப்பு வேலைகளில் கட்டுப்பாடற்ற பாவனைக்கு அரசாங்க மின்சாரத் திணைக்களம் அங்கீகரித்துள்ள எஸ்-லோன் வன்மைப் பீவீசீ குழாய்.

தனிச் சிறப்புள்ள மின்காப்புத் தன்மை கொண்ட எஸ்-லோன், மின் இணைப்பு வேலைக்கு மிகப் பாதுகாப்பானது மட்டுமன்று; அதைச் சுருக்கச் செலவில் இலகுவாய் இணைக்கலாம்; அது நிரந்தரமானது; நீடித்த பயன் தருவது; இறகு போற் பாரங் குறைந்தது - இவையெல்லாம் அதன் முத்திரைச் சிறப்புகள்!

உ-லோன் எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

the maharaja organisation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

